இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 296 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 24 – ஞாயிற்றுக்கிழமை 07 ஜூன் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 296 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 24 - Sunday 07 June 2026 - Madurai 8 Pages ₹ 5.00



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை – அண்ணா அறிவாலயத்தில், நேற்று, அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த 1200க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்த விழாவில் உரையாற்றிய காட்சி!

## தோல்வியைக் கண்டு துவண்டு விட மாட்டோம்!

# ஆட்சியை விட ஜனநாயகம்தான் முக்கியம் எனக் கருதும் இயக்கம் தி.மு.க.!

### அ.தி.மு.க. கட்சியினர் 1200க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்த நிகழ்ச்சியில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜூன் 7 -**

**காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து அ.தி.மு.க. கட்சியினர் 1200க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்த நிகழ்ச்சியில் வரவேற்று உரையாற்றிய கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "தோல்வியைக் கண்டு துவண்டு விட மாட்டோம்" என்றும் "ஆட்சியை விட ஜனநாயகம்தான் முக்கியம் எனக் கருதும் இயக்கம் தி.மு.க." என்றும் குறிப்பிட்டார்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று (06.06.2026) நடைபெற்ற நிகழ்ச்சியில், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்ட - காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் கஜா (எ) கஜேந்திரன் அவர்கள் தலைமையில் 1200க்கும் மேற்பட்ட மாற்றுக்கட்சியினர் கழகத்தில் இணையும் விழாவில், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -




கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று, சென்னை – அண்ணா அறிவாலயத்தில், அ.தி.மு.க.வைச் சேர்ந்த காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் எம்.கஜா (எ) கஜேந்திரன் தலைமையில் அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த 1200க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர். அதுபோது கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன், பல்லாவரம் இ.கருணாநிதி, மாமல்லபுரம் வெ.விசுவநாதன், வரலட்சுமி மதுசூதனன் ஆகியோர் உள்ளனர்.

தாய்க் கழகமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொள்வதற்காக வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரையும் வருக, வருக, வருக என நான் வரவேற்க விரும்புகிறேன்.

அண்ணா அறிவாலயத்திற்கு வந்திருக்கிறீர்கள்; கலைஞர் அரங்கத்தில் உட்கார்ந்திருக்கிறீர்கள். அந்த உணர்வோடு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் மீண்டும் மீண்டும் நான் வரவேற்கிறேன்.

75 ஆண்டு காலம் தன்னுடைய லட்சியப் பயணத்தைத் தொடர்ந்து நடத்தி, பவள விழா கொண்டாடி இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள்.

**மீண்டும் மீண்டும் வருக வருக என வரவேற்கிறேன்!**

அதுமட்டுமல்ல, ஒரு முறை அல்ல, ஆறு முறை தமிழ்நாட்டில் ஆட்சி நடத்திய திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொள்ள வந்திருக்கிறீர்கள். நவீன தமிழ்நாட்டை உருவாக்கித் தந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த அண்ணா அறிவாலயத்திற்கு நீங்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள். எனவே, வந்திருக்கும் அனைவரையும் நான் மீண்டும் மீண்டும் வருக, வருக என வரவேற்கிறேன்.

எப்போதுமே ஒரு இயக்கத்தில் இருந்து இன்னொரு இயக்கத்திற்குப் பிரிந்து போகிறார்கள் என்று சொன்னால், ஏதோ ஒரு லாபத்தை அடிப்படையாக வைத்து, ஏதோ வசதியை மனதில் கொண்டு, ஆளுங்கட்சியை நோக்கித்தான் அதிகமாகப் போவது உண்டு. அதைத்தான் நாமும் பார்த்திருக்கிறோம்.

ஆனால் இன்றைக்கு தி.மு.க. ஆளுங்கட்சி அல்ல; ஆளுங்கட்சியாக இருந்து, இப்போது எதிர்க்கட்சியாக மாறி இருக்கிறது. அதனால் எதிர்க்கட்சியை நோக்கி நீங்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள் என்று சொன்னால், பதவிக்காக நீங்கள் வரவில்லை, சொகுசாக வாழ வேண்டும் என்பதற்காக நீங்கள் எல்லாம் வரவில்லை. பணியாற்ற வேண்டும், இந்த இயக்கத்திற்குத் துணை நிற்க வேண்டும், தமிழ் சமுதாயத்திற்கு நாம் பாடுபட வேண்டும், இழந்திருக்கும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வோடு வந்திருக்கிறீர்கள். அப்படி வந்திருக்கும் உங்களை எல்லாம் நான் மீண்டும் மீண்டும் வரவேற்கிறேன்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

### கேள்வித் தாள் கசிவு விவகாரத்தில்

## ஒன்றிய பா.ஜ.க. அரசு மவுனமாக இருப்பது ஏன்?

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி, கேள்வி!

*சென்னை, ஜூன் 7 -*

*"கரப்பான் பூச்சிகள்" அமைப்பில் போராட்டத்தை தடுப்பதில் வேகத்தை காட்டும் ஒன்றிய அரசு, சி.பி.எஸ்.இ. மற்றும் நீட் கேள்வித் தாள் கசிவு விவகாரத்தில் மவுனமாக இருப்பது ஏன்? என கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி எழுப்பி உள்ளார்.*

*கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,*

*டெல்லி ஜந்தர் மந்தருக்குள் "கரப்பான் பூச்சிகள்" நுழைவதைத் தடுப்பதற்காக பா.ஜ.க. அரசு மிக வேகமாக தடுப்புகளை அமைத்து பாதுகாப்புப் படைகளை நிலைநிறுத்திய விதம், சி.பி.எஸ்.இ. மற்றும் நீட் தொடர்பான மிக முக்கியமான பிரச்சினைகளில், ஒன்றிய அரசு கடைப்பிடிக்கும் மௌனத்திற்கு முற்றிலும் முரணாக உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.*

*மாநிலங்களின் அதிகாரத்தின் கீழ் கல்வி இருக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருவதை சுட்டிக்காட்டி உள்ள கனிமொழி கருணாநிதி எம்.பி. பாதிக்கப்படும் மக்களுக்கு நெருக்கமான நிலையில் அரசின் முடிவுகள் எடுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.*



---

## நள்ளிரவில் அம்பேத்கர் சிலையை அகற்றிய காவல்துறையினர்!

### எந்த முன்னறிவிப்பும் இன்றி சிலை அகற்றப்பட்டதால் பதற்றம்!

*விழுப்புரம், ஜூன் 7 -*

*விழுப்புரம் பழைய பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்ட அம்பேத்கர் சிலையை காவல்துறையினர் நள்ளிரவில் அகற்றிய சம்பவம் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.*

*விழுப்புரம் பழைய பேருந்து நிலையம் எதிரே உள்ள ஜி.ஆர்.பி. தெரு வில், கடந்த சில நாட்களுக்கு முன் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் அம்பேத்கர் சிலையை நிறுவினர். இந்த சிலையை வி.சி.க. கட்சித் தலைவர் திருமாவளவன் திறந்து வைப்பதாக இருந்தது.*

*இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு க்ரைன் உதவியுடன் அம்பேத்கர் சிலையை காவல்துறையினர் அகற்றினர். இதனை அறிந்த அப்பகுதி மக்கள் சாலையில் திரண்டு காவல் துறையினருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.*

*பொதுமக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி, அம்பேத்கர் சிலையை விழுப்புரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு காவல்துறையினர் கொண்டு சென்றனர்.*

*த.வெ.க. கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்தவர்கள் அமைத்த அம்பேத்கர் சிலையை காவல்துறை யினர் அகற்றிய சம்பவம் அப்பகுதி மக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.*